# ஜன தாக்ஷன செய்திகள்

2007 பகுதி - 3 தொகுதி 2

நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியின் பொருட்டு பொருத்தமான தொழில்நுட்பப் பாவனை சம்பந்தமான பிறக்டிக்கல் எக்சன் நிறுவனத்தின் காலாண்டு செய்திமடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன தாக்ஷன செய்திகள்

2007 பகுதி - 3 தொகுதி 2

# விடயம்

03 பதிப்புரை

04 அனர்த்த முகாமைத்துவத்தில் ஊனத்தின் உணர்வு

06 தெற்கு ஆசியப்பிராந்தியத்தில் வலதுகுறைந்த மக்களை பொது நடவடிக்கைகளில் உட்படுத்துவதற்கான பகிர்வு அனுபவம் - திரிய 2007

10 வேலையற்ற ஊனமடைந்த போர்வீரர்கள் விலை உயர்ந்த செயற்கை உறுப்புக்களைப் பெறுவதற்கு திண்டாடுகிறார்கள்

11 பீ.கே. யின் கதை

**பிரசுரம்**

ப்றக்டிக்கல் எக்சன்

**ஒருங்கிணைப்பும் பதிப்பும்**

தனுசி சேனநாயக்க

தம்பிஜயா சிவராஜா

சந்தன் சிறிவர்தன

**பங்களிப்பு**

ப்றக்டிக்கல் எக்சன் உத்தியோகத்தர்கள்

**படவரைபும் பக்கவமைப்பும்**

மினிது அபேசேகர

**புகைப்படங்கள்**

ப்றக்டிக்கல் எக்சன் உத்தியோகத்தர்கள்

**ப்றக்டிக்கல் எக்சன்**

5, லயனல் எதிரிசிங்க மாவத்தை

கொழும்பு 05, இலங்கை

T +94 -11 2829412

F+ 94-11-2856188

E srilanka@practicalaction.org.lk

W www.practicalaction.org

www.janathakshan.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஆராய்ச்சி ஆவணங்களிலிருந்து இலங்கையில் சுமார் 500,000 வலதுகுறைந்த மக்கள் வாழ்ந்துவருவதாகவும் அவர்களில் 10,000 பேர் (அதாவது 2 வீதம்) மட்டும் கல்வி மற்றும் பொருத்தமான அடிப்படைச் சேவைகளைப் பெற்றுவருவதாகவும் அறியமுடிகிறது. துர் அதிஷ்டவசமாக பெரும்பாலான அபிவிருத்தி நடவடிக்கைகளில் வலதுகுறைந்த மக்கள் வளவாளர்களாக இனங்காணப்படுவதில்லை. இதன் விளைவாக வலது குறைந்த மக்களைப் புறந்தள்ளி வைக்கும் பாரம்பரிய நடைமுறைகள் ஊடாகவே நலன்புரி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், சமனிலையையும் நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டுமாயின் சகல வலது குறைந்த மக்களுக்கும் இத்தகைய நடவடிக்கைகளில் சம சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். அபிவிருத்தி நடவடிக்கைகளில் வலது குறைந்த மக்களை ஈடுபடுத்துவதற்கு அபிவிருத்தி நடவடிக்கையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் பாரிய பொறுப்பினைக் கொண்டிருக்க வேண்டும். அதிக செலவும் பொருளாதார மற்றும் சமூக சார்புத் தன்மையும் காணப்படுவதால் வலது குறைந்த மக்கள் மட்டுமல்ல முழுக்குடும்பமும் சமூகமும் மற்றும் சமுதாயமும் நேரடியாக பாரிய அளவில் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பௌதிக மற்றும் வைத்திய ரீதியிலும் பார்க்க சமூகரீதியாகவே ஊனம் பெரிதும் தாக்கம் கொண்டுள்ளது.



வலது குறைந்த மக்களை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் தீர்வுகளை திரிய - 2007 மகாநாடு நோக்கமாகக் கொண்டிருந்தது. பொதுவாகவும் விசேடமாகவும் பேசப்படும் ஒரு புராணக்கதை தொடர்பான உரையாடல் மற்றும் விவாதத்தை இந்த மகாநாடு ஏற்படுத்தியுள்ளது. வலது குறைந்த மக்கள் தனித்துவமான அபிவிருத்தி செயற்பாடுகளைக் கொண்டுள்ளனர். அனர்த்தங்கள் மற்றும் முதுமை பெறும் சனத்தொகை பெருகுதல் போன்ற பல்வேறு காரணங்களால் வலது குறைந்த மக்களுக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் அனர்த்த உணர்வுகள் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மிக முக்கியமானதாகும். வறுமைக்கும் ஊனத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு ஒற்றுமை காணப்படுகிறது. ஊனம் சார்பான பிரச்சனைகளை அறிந்து கொள்வதற்கும் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும் ஒரு உரையாடல் மன்றினை வழங்குவதற்கு இந்த மகாநாடு எதிர்பார்க்கிறது. ஊனம் உணர்வினையும் சந்தர்ப்பங்களையும் தந்திரோபாயங்களில் உட்படுத்துவதற்கான சிறு சிறு மாற்றங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பின்பற்றப்பட வேண்டும். இந்த மாற்றங்களும் தந்திரோபாயங்களும் திட்டங்கள் தயாரிக்கப்படும்போதே இனங்காணப்பட வேண்டும். எதிர்பார்க்கப்படும் மாற்றத்தின் வகையும் தீவிரத்தன்மையும் அதன் தொழில் நுட்பப்பரப்பளவு மற்றும் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. பல்வேறு முக்கிய உரையாடல்கள், பத்திரங்கள் சமர்ப்பித்தல் மற்றும் வட்ட மேசை மகாநாடுகள் மூலம் அனர்த்த முகாமைத்துவம், மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்கள் (MDGs), நீர் - சுகாதாரம், போக்குவரத்து, வடிவமைப்பு, சுற்றாடல் கட்டமைப்பு போன்ற விசேட தொழில் நுட்பப் பரப்புக்களை இந்த மகாநாடு ஆராயவுள்ளது. இந்த மகாநாடு இலங்கை சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சு, மனித உரிமைக்குழுவின் அனர்த்த நிவாரணக் கண்காணிப்புக்குழு (DRMU), ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் மற்றும் வலது குறைந்தவர்களுக்கான அபிவிருத்தி வலைப்பின்னல் முதலிய நிறுவனங்களால் ஒழுங்குசெய்யப்பட்டது.

2007 - திரிய மகாநாட்டில் உரையாடப்பட்ட சில பத்திரங்கள் மற்றும் சம்பாஷணைகளின் தொகுப்பே இந்த ஜனதாக்ஷண வெளியீடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவத்தில்

## ஊனத்தின் உணர்வு

தற்போதைய புரிந்துணர்வுகளின்படி அனர்த்த முகாமைத்துவத்தை முழுமையான அபிவிருத்திச் செயற்பாடுகளிலிருந்து தனிமைப்படுத்த முடியாது. நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி விளைவுகளைப் பெறவேண்டுமாயின் முன்னேற்பாடாக அனர்த்த முகாமைத்துவம் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஊனத்தை சமூகத்தில் குறிப்பாக ஒரு நலிவுற்ற மற்றும் புறந்தள்ளப்பட்ட ஒன்றாகக் கருதுவதால் ஊனம் உணர்வு தொடர்பான இலங்கையின் முழுமையான அபிவிருத்திக் கொள்கைகள் பற்றி பகுப்பாய்வு செய்யப்படவேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்றவர்களுக்கான ஒரு கொள்கை காணப்படவில்லை

நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான கற்கைப்பத்திரங்களை நாம் காண்பது அரிதாகவிருக்கின்றது. ஊனம் தனிமையாக விடப்பட்டுள்ளது. சமூகசேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சில நிகழ்ச்சித்திட்டங்களில் ஊனம் முழுமையாகவே உள்ளடக்கப்பட்டுள்ளது. வேறு சில நிறுவனங்களினாலும் வலதுகுறைந்த மக்களில் சிலா் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளனா். (உதாரணம் போரினால் ஊனமாக்கப்பட்ட போர்வீரர்களுக்காக தொழிற்பயிற்சி நிலையங்கள் படைப்பிரிவினரால் ஆரம்பிக்கபட்டுள்ளன. இன்னும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த மக்களுக்காக அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆவணங்களில் இவை சான்றுகளாகக் காணப்பட்டாலும் தற்போதைய பொருளாதார தேவையின்பொருட்டு மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எத்தகைய தரமும் பிரயோகமும் கொண்டன எனக் கூறமுடியாதுள்ளது.

இலங்கையின் பாரிய அபிவிருத்திக் கொள்கைப் பிரகடனங்களிலும் வலதுகுறைந்த மக்கள் தொடர்பான அம்சங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. உதாரணம்: 252 பக்கங்கள்கொண்ட இலங்கையை மீளக்கொணா்தல் என்ற "துரித அபிவிருத்திக்கான நோக்கும் தந்திரோபாயமும்" ஆவணத்திலும் ஒரேயொரு விடயமே காணப்படுகிறது.

தொழிற்பயிற்சிகள் வழங்குதல், 100 தொழிலாளர்களைக்கொண்ட நிறுவனங்களில் 3 வீதத்தை இம்மக்களுக்கு ஒதுக்குதல், வலது குறைந்த மக்களின் உரிமைகளைப் பேணும்பொருட்டு அவர்களுக்குப் பொருத்தமான பொதுக்கட்டடங்கள் அமைத்தல் போன்ற ஊனம் தொடர்பான விசேடத்தன்மைகளைக் கொண்ட "மஹிந்த சிந்தனை" என்ற இன்றைய கௌரவ ஜனாதிபதி அவர்களின் கொள்கைப் பிரகடனம் பாராட்டப்படவேண்டியதாகும்.

உலகளாவிய ரீதியிலும் ஊனம் பின்வரிசைக்குச் சென்றுவிடுகிறது. எட்டு பிரபல்யம் வாய்ந்த மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களையும் 18 நோக்கங்கள் மற்றும் 48 குறியீடுகளையும் கொண்ட ஐக்கிய நாடுகள் மிலேனியம் பிரகடனத்திலும் வலது குறைந்த மக்கள் உட்படுத்தப்படாதமை இதற்கு ஒரு உதாரணமாகும்.

"பாதுகாப்பான இலங்கையை நோக்கி – அனர்த்தபீதி முகாமைத்துவதிற்கான நோக்கு" என்ற இலங்கையின் பிரதான அனர்த்த முகாமைத்துவத்துவச் செயற்றிட்டத்திலும் வலது குறைந்த மக்கள் தொடர்பான எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. அனர்த்த தயார்நிலை மற்றும் உதவி வழங்கல் தொடர்பான திட்டமிடல்களிலும் இம்மக்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

அனர்த்தத் தயாரித்தல் மற்றும் தணித்தல் தொடர்பான திட்டங்களில் எதுவித வழிகாட்டல்களும் காணப்படாமையால் இந்தத் திட்டங்களில் ஊனம் தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றனவா என்று கூறமுடியாதுமுள்ளது.

பிரதானமான அபிவிருத்தித் திட்டங்களில் கொள்கைகள் எதுவும் காணப்படாமையால் பல பல கொள்கைள் இடம்பெற்ற பாரிய முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது. நல்ல நோக்குடன் வலது குறைந்த மக்களுக்காகச் சிறந்த கொள்கைகளை உருவாக்குவதே தற்போது இலங்கைக்கு சிறந்த ஒரு தெரிவாகக் காணப்படுகிறது. இலங்கையில் தற்போது அனர்த்தமுகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளில் இந்தக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது திட்டமிடல் மற்றும் நடைமறைப்படுத்துதலில் ஊனம் தொடர்பான உணர்வுகள் உட்புகுத்தப்படுகின்றனவா என்பது பற்றி தற்போது ஆராய்வோம்.

பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துறை சார்ந்த அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தாலும் இம்மக்களுக்காக சிறிய அளவிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனலாம். ஆகவே, இந்த நிலைமையைப் பகுப்பாய்வு செய்யமுடியாதுள்ளது. ஆனால், அனர்த்த முகாமைத்துவ நிவாரணம் மற்றும் உதவி வழங்கல் பணிகளின்போது வலது குறைந்த மக்களுக்காக விசேட கவனம் செலுத்தப்படுகின்றது என பல நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.
துர்அதிஸ்டவசமாக 2004, 2005 ல் சுனாமி நிவாரணம் வழங்கல், 2003 ல் வெள்ள நிவாரணம் வழங்கல், 2006, 2007 ல் மண்சரிவு நிவாரணம் வழங்கல் போன்ற தேவைகளை அடிப்படையாகக் கொண்ட நிவாரண வழங்கல் நடவடிக்கைகளின்போது சில தவறுகள் ஏற்பட்டுள்ளதாக கள அறிக்கைகள் சான்று பகர்கின்றன. வலது குறைந்த மக்களுக்காக இத்தகைய நிவாரணம் வழங்கல் நடவடிக்கைகளின்போது விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை.

அனர்த்த முகாமைத்துவ வட்டத்தில் எந்தக் கட்டத்திலும் இம்மக்களின் விசேட தேவைகளைத் தீர்க்கக்கூடிய முயற்சிகள் எடுக்கப்படாமை வேதனைக்குரியது.


வலது குறைந்த மக்களுக்கான குறிப்புக்கள் இதில் நேரடியாகக் காணப்படவில்லையாயினும் "செயற்பாடுகளில் ஹியூகோ கட்டமைப்பு" கலாசார



08 ம் பக்கத்தை பார்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெற்கு ஆசியப்பிராந்தியத்தில் வலதுகுறைந்த மக்களை பொது நடவடிக்கைகளில் உட்படுத்துவதற்கான பகிர்வு அனுபவம் - திரிய 2007

ஊனம் என்பது பல்வேறு விதமாகக் விபரிக்கப்பட்டுவருவதோடு இது பல்வேறு கோணங்களில் அர்த்தப்படுத்தப்பட்டும் வருகிறது. மனித உரிமை, வறுமை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஊனம் ஒரு முக்கிய விடயம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

சமூக நலத்துறை அமைச்சின் புள்ளிவிபரத்தின்படி இலங்கை மக்களில் 4 வீதத்தினர் வலதுகுறைந்தவர்களாகக் காணப்பட்டாலும் நிஜத்தில் இதன் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகிறது. 2002 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி வலதுகுறைந்த மக்களின் எண்ணிக்கை 274711 ஆக இருந்தது. வலது குறைந்தவர்கள் பற்றிய சிறந்த பயிற்சிகள் இந்தப்பணியை மேற்கொண்டோருக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இந்தத் தொகையும் சரியானது எனக் கூறமுடியாதுள்ளது. ஒரு வறிய குடியிருப்பில் தமது அன்றாட வாழ்க்கையையே கொண்டு செல்லமுடியாதிருக்கும்போது வலதுகுறைந்த ஒரு உறுப்பினர் மேலும் அக்குடும்பத்திற்குச் சுமையாகக் காணப்படுகிறது. விசேடமாக வயதுவந்த பெற்றோர் தம்மையே கவனிக்கமுடியாது திண்டாடும்போது வலதுகுறைந்த தம் மக்களையும் வைத்துப் பராமாரிக்கமுடியாது கஷ்டப்படுகிறார்கள். "வலது குறைந்த மக்களின் பாதுகாப்பு" என்ற சட்டம் 1996 ல் அமுல்படுத்தப்பட்டாலும் அதன் நடைமுறை மந்தகதியிலேயே தொடர்கிறது.

இந்த நிலையில் வலதுகுறைந்த மக்கள் ஓரங்கட்டப்பட்டவர்களாக மாறிவருவதோடு அவர்களது தேவைகளும் கவனிக்கப்படாமல் செல்கிறது. நகரத்தில் வாழ்ந்துவரும் வலதுகுறைந்த மக்களுடன் ஒப்பிடும்போது கிராமத்தில் வசிக்கும் ஊனமுற்ற மக்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகின்றனர். இலங்கையில் வலதுகுறைந்த மக்களின் அதிகூடிய வீதமான (37.8%) மக்கள் அவயவங்கள ஊனப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஆயினும் அம்மைப் பால் ஊசி ஏற்றும் நடைமுறை மிகச்சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்தப்படுவதால் போலியோத்தாக்க ஊனம் பாரிய அளவில் குறைக்கப்படுகிறது.

ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்று சமூகத்தில் சகல மக்களும் ஒரேவிதமாக எதுவித பாகுபாடுமின்றி கவனிக்கப்படவேண்டும் என்பதாகும். ஆயினும், இந்நிறுவனம் அபிவிருத்திக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் இத்தகைய வலதுகுறைந்த மக்கள் இந்த நடவடிக்கைகளில் பங்குபெறாதிருப்பதைக் காணமுடிந்தது. பங்கேற்புத் திட்டமிடல் மற்றும் சமூகமட்ட நடவடிக்கைகளில் இம்மக்களின் பிரசன்னம் காணப்படாமையினால் இவர்களுக்குரிய தேவைகளும் நலன்களும் திட்டங்களில் குறைவாகவே காணப்பட்டது. அத்துடன் சமூகத்தில் மட்டுமல்லல தமது குடும்பங்களிலும் இம்மக்கள் ஓரங்கட்டப்பட்டவர்களாகக் காணப்பட்டதை பல விசாரணைகள் மூலம் தெரியவந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெறுபேறுகள் மற்றும் தகவல்களைக் கிராமங்களிலிருந்து சேகரித்து வலது குறைந்த மக்களை பொதுவிடயங்களில் ஈடுபடுத்துவதற்கான ஒரு கட்டமைப்பினை தயாரிப்பதற்கு ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் 2002 ல் நடவடிக்கை எடுத்தது.

சமூக பொருளாதார நடவடிக்கைகளில் வலது குறைந்த மக்களை ஈடுபடுத்துவதற்கு சமுதாயத்தில் அவர்களுக்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். புனரமைப்பும் உபகரணங்களும், நகர்வதற்கு ஏற்ற வழி சமைத்தல், மனமாற்றம் என்ற மூன்று விடயங்களையும் கொண்ட இணைந்த அணுகுமுறை காணப்பட்டாலே "யாவருக்குமான சமுதாயம்" என்ற இலக்கினை அடையமுடியும். (Werner – 1998)

ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் பொருத்தமான தொழில்நுட்பம் என்ற கருவியைப் பிரயோகித்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது சமூக மட்டச் செயற்பாடுகளில் சமூகத்திலுள்ள வலது குறைந்த மக்கள் உட்படுத்தப்படுவதில்லை. இத்தகைய நடவடிக்கைகளில் வலதுகுறைந்த மக்களின் பங்கேற்புத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் முதலிய செயற்பாடுகள் காணப்படாமையினால் இதன்பெறுபேறுகளில் இம்மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது மிக அரிதாகவே காணப்படுகிறது.

உள்ளூர்ப் பிரதேசங்களில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் இம்மக்கள் நகர்வதற்கான வழிசமைத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளில் இவர்களை உட்படுத்துவதற்காக ஐந்தாண்டு ஆராய்ச்சித் திட்டத்தை வடிவமைத்துள்ளது. (2002)

வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் ஊவா மற்றும் தென்மேல் மாகாணங்களில் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ளூர் மற்றும் தேசிய மட்ட தகவல்கள் PRA ஊடாகச் சேகரிக்கப்பட்டன. இந்தத் தகவல்கள் வலது குறைந்த மக்களை மட்டும் உள்ளடக்கியிருக்கவில்லை. இந்த நடவடிக்கையின்போது பெற்றோர், குடும்ப உறுப்பினர் மற்றும் வலதுகுறைந்த மக்கள் யாவரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

வலது குறைந்த மக்கள் மற்றும் அபிவிருத்திக்காக உழைக்கும் நிறுவனங்களின் ஒரு தேசியமட்ட வலைப்பின்னல் ஏற்படுத்தப்பட்டு ஆராய்ச்சிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இம்மக்களின் பொதுவான பிரச்சனைகள் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் என்பன ஆராயப்பட்டு தேசிய மட்ட மற்றும் உள்ளூர் மட்ட நிலைமைகள் ஒன்றுடன் ஒன்று ஒப்பீடு செய்யப்பட்டன.

இதன்போது 67 ஊனமுற்ற மக்கள் இனங்காணப்பட்டனர். இவர்களில் 8 பேர் கண்பார்வையற்றவர்கள், 22 பேர் உடல் ஊனமுற்றவர்கள், 22 பேர் காது கேளாத வாய் பேசமுடியாதவர்கள் மற்றும் 15 பேர் மனநோயாளர்கள். இவர்கள் யாவரும் 5 – 55 வயதுகளுக்குட்பட்டவர்களாகவே காணப்பட்டதோடு



சிறுகுழந்தைகள் எவரும் காணப்படவில்லை. கண்பார்வையற்றவர்களில் மூவர் பிறரில் தங்கியுள்ளனர். கண்பார்வையற்றவர்கள் எண்மரும் தமது ஐந்து வயதின்பின்னரே பார்வையை இழந்துள்ளனர்.

ஊனமுற்ற மக்களில் 80 வீதத்தினர் பிறப்பிலிருந்தே தம்மால் இயங்கமுடியாது பெற்றோரில் தங்கி வாழ்ந்து வருவதாகவும் வாழ்க்கைத்திறன் மற்றும் சமூக ஈடுபாடுகள் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாதவர்களாகவும் காணப்பட்டனர்.

வலது குறைந்த மக்கள் உதவிகள் மற்றும் நிவாரணங்கள் பெறவேண்டியவர்களாக ஊனம் இல்லாதவர்களின் கண்களுக்குத் தோன்றுகின்றனர். பொதுக்கூட்டங்களின்போது நகருந்தன்மையைப் பெற்றுள்ள வலது குறைந்த மக்களின் பிரசன்னம் காணப்பட்டது. இந்த மக்களுக்கு சமூகத்தில் சிறந்த வரவேற்பு காணப்பட்டது. உடல் ஊனமுற்ற பெரும்பாலானோர் வருமானம் ஈட்டும் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். நகரும் தன்மையற்ற ஊனமுற்ற மக்கள் சமூகரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்டுவிடப்படுகின்றனர்.

எனவே, வலது குறைந்த மக்களுக்கு நகருந்தன்மை காணப்படுமேயானால் சமூக செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தமுடியும் என்பது தெளிவு. குடும்ப உறுப்பினரின் சுமைகளையும் குறைக்கமுடியும். குடும்பமட்டத்திலும் இம்மக்களின் ஈடுபாடுகளை உட்படுத்தமுடியும்.

வலது குறைந்த மக்களின் சமூக செயற்பாடுகளுக்கு சில மக்களின் மனப்போக்கும் தடைசெய்கின்றன. இத்தகைய மனப்போக்கு வேறுபாடுகள் காரணமாக ஊனமுற்ற மக்கள் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் மற்றும் சமூக உதவிகள் பெறப்படவேண்டியவர்கள் என ஏனைய உறுப்பினர்களால் பார்க்கப்படுவதில்லை.

ஆனால் மனநோய், காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத மக்களுக்கு நகருந்தன்மையைக் கொடுக்கக்கூடிய கருவிகள் அளிக்கப்பட்டாலும் பெரிய அளவில் அவை உதவுவதில்லை. தூற்றிப் பேசுதல் மற்றும் தொந்தரவு கொடுத்தலுடன் ஊனமுற்ற மக்களை சமூகப்பணிகளில் ஈடுபடுத்தினால் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியாது. எனினும் பொருத்தமான புனரமைப்புக்களை மேற்கொண்டு அம்மக்களை இத்தகைய பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லினத்தன்மை, வயது மற்றும் ஏனைய நலிவுறுந் தாக்கங்கள் போன்றவை அனர்த்தப்பீதிக் குறைத்தலுக்கான திட்டமிடலின்போது கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்ற அவசியம் பற்றி குறிப்பிடுகின்றது.

"செயற்பாடுகளில் ஹியூகோ கட்டமைப்பு" இல் இலங்கையும் கையெழுத்திட்டதனால் எதிர்காலத்தில் சில கடைமைகளை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு இலங்கைக்கு உள்ளது. ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களில் ஊனம் தொடர்பான உணர்வுகள் அதிகரித்து வருவதோடு பாரிய ஏழ்மை நிலைக்கான மூலகாரணங்களை தமது நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டு வருவதாலும் அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களில் ஊனம் தொடர்பான உணர்வுகள் உள்ளடக்கப்படவேண்டும் என்ற அழுத்தம் இலங்கை அரசாங்கத்தின் மீதும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதும் திணிக்கப்படலாம். எனவே, ஊனம் தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் அமுல்படுத்தும்போது ஏற்படும் மனித தடைகள் பற்றி கருத்தில் கொள்ளவேண்டியது மிக அவசியமாகும்.

## புள்ளிவிபரத் தகவல்கள் காணப்படாமை

வலது குறைந்த மக்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் உலகளாவிய ரீதியில் காணப்படாமை ஒரு பாரிய தடையாகக் காணப்படுகிறது. அனர்த்தத்திற்குப் பின்னரான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளை துரித மதிப்பீடு செய்யும்போது ஊனம் சம்பந்தப்பட்ட தகவல்கள் சேகரிப்பதற்குத் தேவையான சில கருவிகள் பாவிக்கப்படவேண்டியது மிக முக்கியமாகும். இவ்வாறான துரித மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்ட பெறுபேறுகள் மற்றும் சிபார்சுகளின் அடிப்படையிலேயே நிவாரணப் பணிகள் பெரும்பாலும் நடைபெறுகின்றன. அத்துடன், சமூக சேவைகள் திணைக்களம் போன்ற அரச திணைக்கங்களும் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களும் வலது குறைந்த மக்கள் தொடர்பான புள்ளிவிபரங்களைக் கொண்டிருப்பதால் நிவாரணப் பணிகளின்போது அரசாங்கத்திற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடையேயான தொடர்புகள் சிறப்பாக இருக்கவேண்டும் என்பது மிக முக்கியமாகும். எனவே, அனர்த்த முகாமைத்துவத் தயார்நிலைக்கட்டத்தில் இத்தகைய வளப்பகிர்வுக் கட்டமைப்பு சேர்க்கப்படவேண்டும். இல்லையேல், தொடர்பாடல் தவறுகள் இலகுவில் ஏற்பட்டு எதிர்பார்த்த அளவு பலன் கிட்டாமல் போய்விடலாம்.



## வலது குறைந்த மக்களின் விசேட தேவைகளைத் தீர்ப்பதற்கான நிபுணர்கள் இல்லாமை

இத்தகைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நிபுணர்களை இந்தத் துறைசார் நிறுவனங்கள் தம்மகத்தே கொண்டிராமையால் ஊனம் தொடர்பான அபிவிருத்தியின் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளின்போது இந்த நிபுணர்கள் முக்கிய இடத்தை வகிக்கமுடியும். உதாரணமாக, பல அபிவிருத்தி நடைவடிக்கையாளர்கள் வலது குறைந்த மக்களின் அபிவிருத்தித் தேவைகைளை இனங்காண்பதற்கான அறிவும் திறனும் கொண்டிராமையாகும். வலது குறைந்த மக்களுக்கிடையே காணப்படும் பல்லினத்தன்மையும் இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வேறுபட்ட நடைமுறைகளும் இந்தப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்குகிறது. விகற்பமான ஒரு நிறுவனத்திலும் பார்க்க ஒரே சீரான தன்மையுடைய ஒ்ரு சமூகத்தை தனி நபர்போல் கருதி திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளை வெளிக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொள்வது மிகச்சிறந்ததாகும். வலது குறைந்த மக்களின் தேவைகளைத் திறமையாகவும் பொருத்தமாகவும் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கு ஏனைய அபிவிருத்தி நடவடிக்கையாளர்களையும் தம் வழிக்குக் கொண்டுவருதல் ஊனம் தொடர்பான அபிவிருத்தி நிபுணர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. வலது குறைந்த மக்கள் வெறுமனே துன்பப்பட்டவர்களாக மட்டுமல்ல வெளியார் உதவிகள் பெறுபவர்களாகவும் கணிக்கப்படுவதில்லை. நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல் வலது குறைந்த மக்களின் அனுபவங்களையும் திறனையும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்வதோடு சமனிலை மற்றும் உள்ளடக்கலை உறுதிப்படுத்துவது மிகமுக்கியமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனங்கள் கொண்ட மக்களின் தேவைகளுக்கான அமைப்பு மற்றும் முறைமை உணர்வுகள் காணப்படாமை

அடுத்து, உடல் மற்றும் மன வளங்குன்றிய மக்களின் இலகுவான செயற்பாட்டிற்காக நடவடிக்கை எடுப்பதன் கருத்து வலது குறைந்த மக்கள் மட்டும் இதனால் நன்மை பெறமுடியும் என்பதல்ல. உண்மையில் இதன் கருத்து இந்த நடவடிக்கை அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதாகும். ஊனம் உணர்வுகொண்ட அமைப்புக்களும் நடைமுறைகளும் ஏற்படுத்துவது ஒரு புதிய அல்லது செலவுகொண்ட



பயிற்சியல்ல. தற்போதைய நிலையைப் போக்கி ஓரங்கட்டப்பட்ட மற்றும் நலிவுறுந்தாக்கத்திலுள்ள மக்களுக்குப் பொருத்தமான நடைமுறைகளைப் புகுத்துதலே இதன் கருத்தாகும்.

அனர்த்தத் தணித்தல் மற்றும் தயார்நிலைப்படுத்துதல் நடவடிக்கைகளின்போது தணித்தலுக்கான மூலதனம் போதிய அளவில் காணப்படுவதில்லை. பொதுவாக இத்தகைய சந்தர்ப்பங்களில் கிடைக்கும் மூலதனங்கள் அரசியல் அதிகாரங்கொண்ட குழுவினர்பால் திருப்பப்படுகிறது. வலது குறைந்த மக்கள் தாமாக ஒரு வலுப்பெற்ற அரசியல் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்டிராமையால் இந்தக் கட்டத்தில் அவர்கள் புறந்தள்ளப்பட்டுவிடுகிறார்கள். அத்துடன் விசேட தேவைகள் கொண்ட மக்களுக்குப் பொருத்தமான கல்வி வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் காணப்படாமையாலும் விசேட கவனம் தேவைப்படும் விசேட குழுக்களாக வலது குறைந்த மக்கள் கருதப்படாமையாலும் அனர்த்தத்தணித்தல் நடவடிக்கைகளின்போது அவர்களின் தேவைகள் கவனிக்கப்படாமல் விடப்படுகின்றன.

மேற்படி காரணங்களையும் விட ஊனம் தொடர்பான அனர்த்த முகாமைத்துவ நிபுணர்களுக்கிடையேயான நல்லுறவு காணப்படாமையும் ஊனம் தொடர்பாக அபிவிருத்தி நடவடிக்கையாளர்கள் மற்றும் கொள்கை, தீர்மானம் எடுப்போரும் தமது வசதிக்கேற்ப செயற்படுவதும் இதற்கு இன்னொரு காரணமெனலாம். சாதாரண தீர்மானம் எடுத்தல் நடைமுறைகளில் இவ்வாறான தகவல்களை உள்ளடக்குவதன் மூலமே வலதுகுறைந்த மக்கள் தொடர்பான புள்ளிவிபரம் இல்லாமையைத் தீர்த்துக் கொள்ளமுடியும். இத்தகைய தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுவது முக்கியத்துவப்படுத்தும் வரை தகவல்கள் தொடர்பான இடைவெளி அதிகரித்து வலது குறைந்த மக்களும் முழுச் சமூகமும் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும். கொள்கை வகுப்பாளர்கள் பால்நிலை உணர்வுகளை மேம்படுத்தும் கீழ்க்காணப்படும் எமது அனுபவங்களை ஊனம் தொடர்பான புரிந்துணர்வுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் பிரயோகிக்கமுடியும்.

மனித அபிவிருத்திக் குறியீட்டினைக் கணிக்கும்போது "பால்நிலை சார் அபிவிருத்திக் குறியீடு" என அழைக்கப்படும் ஒரு குறியீடு பிரயோகிக்கப்படுகிறது. அதேபோல் ஊனம் தொடர்பான குறியீடு ஒன்றினை அறிமுகப்படுத்தி அதன் மூலம் "பால்நிலை சார் அபிவிருத்திக் குறியீட்டின்" குறிக்கோள்கள் போன்று ஊனம் உணர்வுகொண்ட பிரச்சனைகளிலும் கவனம் செலுத்துதல், ஊனம் தொடர்பான அதிகாரங்கள் வருமானங்களில் தங்கியிருக்கவில்லை எனக்காட்டுதல், நாட்டிற்கு நாடு ஊனம் தொடர்பான அதிகாரங்கள் மாறுபடுகின்றன என்பதைக்காட்டுதல் போன்ற விடயங்களில் செயலாற்றமுடியும். இன்னொருபடி உயர்ந்து மாவட்ட மற்றும் மாகாணரீதியாக ஊனம் தொடர்பான குறியீட்டினை மதிப்பீடு செய்வதன்மூலம் வலது குறைந்த மக்களின் பல்வேறு கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவுகளை திறமையுடன் மதிப்பிடமுடியும்.

கிராமசேவகர், பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்டங்களில் வலது குறைந்த மக்களின் தேவைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்படும் அனர்த்த தயார்நிலை மற்றும் நிவாரணம் வழங்குதல் நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே காணப்படும் வழிகாட்டல்களில் புதிய வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல் அனர்த்த முகாமைத்துவத்தில் ஊனம் உணர்வினை மேம்படுத்துதலுக்கான இன்னொரு ஆலோசனையாகும்.

ஊனம் உணர்வுகொண்ட அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் ஒரு தர்ம நடவடிக்கையாகவோ சமுதாயத்தில் ஒரு சாராருக்கான உதவி நடவடிக்கையாகவோ கருதக்கூடாது. மக்கள் செயற்பாடுகளுக்கு இன்னும் பல சந்தர்ப்பங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவோ அல்லது ஒரு கௌரவமான மனித வாழ்க்கைக்கு சுதந்திரம் வழங்குவதாகவோ கருதப்படவேண்டும். வலது குறைந்த மக்களின் பொருத்தமான பங்களிப்பிற்கு சந்தர்ப்பங்கள் வழங்காது அபிவிருத்தி முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாது.

எனவே, ஒரு நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒரு அங்கமாக அனர்த்த முகாமைத்துவம் கருதப்படுவதோடு சமுதாயத்தின் ஒரு மூலையில் வலது குறைந்த மக்கள் புறந்தள்ளப்படக்கூடாது எனவும் அவர்கள் விசேட தேவைகளைக் கொண்டிருப்பவர்கள் மட்டுமல்ல நாட்டின் எதிர்காலத்திற்கு உதவக்கூடிய விசேட அறிவு மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளவர்கள் என்றும் கருதப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற ஊனமடைந்த போர்வீரர்கள் விலை உயர்ந்த செயற்கை உறுப்புக்களைப் பெறுவதற்கு திண்டாடுகிறார்கள்

சேட்டின் ஒரு கைப்பக்கத்தை மடித்தபடி தனது கடமையில் மும்மரமாக ஈடுபட்டிருக்கும் ஊனமுற்ற போர்வீரர் ஆவணங்களைப் பார்த்துக் கையொப்பம் இட்டுக்கொண்டிருந்தார். இலங்கையின் தென்மேல் மாகாணத்தில் வில்பத்து என்ற இடத்தில் தமிழ்ப்புலிகளுடனான மோதலில் தனது ஒரு கையை இழந்த போர்வீரர் அசோகா தயாரத்ன தனது செயற்கைக்கையினை விசேட சம்பவங்கள் தவிர்ந்த மற்றைய நேரங்களில் பாவிப்பதில்லை எனக் கூறுகிறார். இஸ்ரேலில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த செயற்கைக்கை சேதமடைந்துவிட்டால் அதனை இலங்கையில் திருத்திக்கொள்ள முடியாதென்பதாலேயே இவ்வாறு பாவிப்பதில்லை எனத் தெரிவித்தார்.

ஊனமுற்ற முன்னைய போர்வீரர்களுக்கான சங்கத்தின் (ADEP) ஸ்தாபகரும் தலைவருமாகிய தயாரத்ன செயற்கை உறுப்புக்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை நிறுவி அதன்மூலம் காயமடைந்த போர்வீரர்களுக்கு இலவசமாக அல்லது சலுகை அடிப்படையில் அவற்றை விநியோகித்துவரும் செயற்றிட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றார்.

இலங்கையில் செயற்கை உறுப்புக்கள் பொருத்திக்கொண்டுள்ள ஊனமடைந்த போர்வீரர்களின் எண்ணிக்கை 15000 இலிருந்து 20000 வரை காணப்படுவதாகவும் தனது நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி 8000 வரையிலானோர் முன்னைநாள் போர்வீரர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களுமாவர் எனவும் குறிப்பிடுகிறார். இராணுவத்துறையினரால் வழங்கப்படும் இத்தகைய போலி உறுப்புக்கள் பராமரிப்பதற்குக் கடினமாகக் காணப்படுவதாகவும் குறிப்பிடுகிறார். அவை இலகுவில் உடையக்கூடியவை. சிறந்த தரமுள்ள ஒரு போலி உறுப்பு சுமார் ரூபா 25000.00 இற்கும் ரூபா 75000.00 க்குமிடையில் காணப்படுவதால் பெரும்பாலான காயமடைந்த போர்வீரர்கள் தொழிலின்றியும் நாளாந்த வாழ்க்கையை ஓட்டமுடியாமலுமிருப்பதால் இவற்றைப் பெற்றுக்கொள்வது அவர்களுக்கு முடியாமலுள்ளது. மூன்று தசாப்தங்களாகத் தொடரும் போரினால் 65000 மக்களும் போர்வீரர்களும் இதுவரை இறந்துள்ளனர்.

மார்கழி 2005 இலிருந்து யுத்தம் உக்கிரமடைந்ததால் பொதுமக்கள், புலி உறுப்பினர் என 5219 பேர் இறந்துள்ளனர். அத்துடன் 1525 போர்வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

## போரினால் ஊனமுற்றவர்களுக்கான தொழில்வாய்ப்பு

மெழுகுதிரி தயாரிப்பு மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் உற்பத்தி தொடர்பான திறன்களுக்கான பயிற்சிகளை வழங்குவதில் ADEP தன்னை ஈடுபடுத்தியுள்ளது. தமது செயற்கை உறுப்புக்கள் பாதிப்படையாது தொழில் புரிவதற்கேற்ற முச்சக்கர வண்டிகள் மற்றும் "ரக்ஸி" முதலியன கொள்முதல் செய்வதற்கு ஊனமுற்ற போர்வீரர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் இந்தச்சங்கத்தின் ஊடாக வழங்கப்படுகிறது.

ஆயினும் திருப்திகரமான தொழில் வாய்ப்பினை இவர்கள் பெற்றுக்கொள்வது பெரும் சவாலாகவே காணப்படுகிறது. நிலக்கண்ணியில் சிக்கிக் கண்பார்வையை இழந்த ஒரு போர்வீரரின் மனைவியாகிய கே. திலக் ப்ரியங்கனி குறிப்பிடுகையில் தானும் தனது மூன்று பிள்ளைகளும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கிறார். தனக்கு முக்கிய பிரச்சனையாகக் காணப்படுவது சந்தைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதே எனச் சொன்னார். வீடு வீடாகவும் கடை கடையாகவும் சென்று வியாபாரம் செய்யவேண்டியுள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

அதிகரித்துவரும் வன்செயல்கள் காரணமாக பாரிய அளவில் பாதிக்கப்படுவது போர்வீரர்களே என்பதால் அவர்கள் தமது எஞ்சிய வாழ்க்கையைக் கொண்டுசெல்வதற்கு உதவுவதே தனக்குள்ள பெரிய சவாலாக உள்ளதாக தயாரத்ன குறிப்பிடுகிறார்.

## செயற்கை உறுப்புக்களுக்கு அதிக கிராக்கி உள்ளது

தொடர்ந்தும் போரில் ஈடுபடமுடியாதவாறு 11154 போர்வீரர்கள் 2006 வரை ஊனமுற்றுள்ளனர். றணவிரு செவென என்ற நலன்புரி நிலையத்தினூடாக ஒரு அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் ஜெய்பூர் பாதணி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் 2005 வரை 9340 செயற்கை உறுப்புக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

போர் உக்கிரமடைந்த 1983 இலிருந்து 22000 அரச படையினர் ஊனமாக்கப்பட்டுள்ளனர். தற்போதைய கிராக்கியை ஈடு செய்வதற்காக உள்நாட்டிலேயே உற்பத்தி நிலையம் ஆரம்பித்து அதில் பணியாற்றுவதற்காக நான்கு அல்லது ஐந்து இலங்கை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை மலேசியா அல்லது தாய்வானுக்கு அனுப்பி பயிற்சிகள் பெற்றுக்கொடுப்பதற்காக தனது நிறுவனம் நிதி பெறுவதற்கு முயற்சிப்பதற்காகவும் கூறினார்.

தனது செயற்கைக்காலின்மீது விசேடமான "சொக்ஸ்" பொருத்துவதற்கு பணம் பெறமுடியாதுள்ள ஜீ. ஜயதிலக என்பவர் குறிப்பிடுகையில் கொழும்பிலுள்ள இராணுவ வேலைத்தளத்தில் தனது செயற்கைக்காலினை ஒப்படைத்தால் எப்போ திருத்திக்கொடுப்பார்களோ என்ற ஆதங்கம் தனக்கு இருப்பதாகவும் தெரிவிக்கிறார். புதிதாக ஊனமடையும் போர்வீரர்களுக்கே முன்னுரிமை கொடுப்பதால் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகள் தாமதித்தே கவனிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

### போரினால் ஊனமடைந்தவர்களுக்கான பரிந்துரை

இலங்கையில் யுத்தத்தினால் ஊனமடையும் போர்வீரர்களுக்கு செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் பணியில் ஈடுபட்டுவரும் ஒரேயொரு நிறுவனமாகிய ADEP இம்மக்களின் தொழில்வாய்ப்பினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு பல விழிப்புணர்வுகள் மற்றும் பரிந்துரை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உலக வங்கி ரூபா 500,000.00 வழங்கியுள்ளது.

வலது குறைந்த மக்கள் பொது இடங்களில் ஊசாடுதல், அவர்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் போரினால் விதவைகள், அனாதைகளாக்கப்பட்டவர்களின் மேம்பாடு முதலிய பரந்த அளவிலான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுவருகிறது.

இந்த நிதியினைப் பாவித்து றணவிரு கிராமங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த அயற் கிராமங்களிலுள்ள மக்களுக்கும் ஊனமடைந்த ஏனையவர்களின் தொடர்பினை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பீ.கே. யின் கதை



உயரமான, பொதுநிறங்கொண்ட, பிரேமகாந்தன் கணபதிப்பிள்ளை ஒரு விநோதமான ஆனால் எல்லோராலும் விரும்பப்படும் உத்தியோகத்தர். இவா தனது கடமைகளை மிக அமைதியாக ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனத்தில் ஆற்றிக்கொண்டிருக்கின்றார். ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனத்தில் அதிகூடிய காலம் அதாவது பத்து வருடங்கள் வரை பணியாற்றிவரும் உத்தியோகத்தர்களில் பீ.கே என அன்பாக அழைக்கப்படும் பிரேமகாந்தன் வலது குறைந்தவராகக் காணப்பட்டாலும் எமக்கு இன்றியமையாத ஒரு உத்தியோகத்தராகக் காணப்படுகின்றார்.

ஆரம்பத்தில் ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனத்தில் தபால் உத்தியோகத்தர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட பீ.கே. தற்போது தபால் விநியோகம், போட்டோ பிரதியெடுத்தல், லமினேற்றிங், வங்கி கொடுக்கல் வாங்கல், மற்றும் காரியால எழுது கருவிகள் தேவைகளைக் கவனித்தல் போன்ற பல கடமைகளையும் பொறுப்பேற்று நன்கு பணியாற்றிவருகிறார்.

அவர் தனது இளமைப் பராயத்தில் சோகமான ஒரு விபத்தின்போது தனது இரு செவிப்புலன்களையும் பேசுந்திறனையும் இழந்தார். ஆயினும், அவரது "ஊனம்" எதுவிதத்திலும் அவரது காரியாலய நாளாந்த கடமைகளை பாதிக்கவில்லை. அவரது சக உத்தியோகத்தர்கள் சைகை மொழி மூலம் அவருடன் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொண்டுள்ளபோதிலும் மிகச் சிலரே இதில் பாண்டித்தியம் பெற்றுள்ளனர். ஏனையோர் சமிக்ஞை மற்றும் எழுத்துக்கள் மூலமே தொடர்பு வைத்துக்கொள்கின்றனர்.

உலகின் தொழில் துறைக்கு வலது குறைந்த மக்களும் தங்கள் பங்களிப்பினைச் சமமாகவே வழங்க முடியும் என்ற எண்ணக்கருவினை ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் இந்த விவரணத்தின் மூலம் வெற்றிகரமாக நிரூபித்துள்ளது. ஆயினும், சைகை மொழிகள் பற்றிய அறிவினை அதிகரித்தல், வலது குறைந்த மக்கள் கையினால் உணர்ந்து அறிந்துகொள்ளக் கூடிய தகவல் உற்பத்திகளை தயாரித்தல் முதலிய விடயங்களில் மேலும் சில அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன தாக்ஷன செய்திகள்

## எம்மைப் பற்றி

ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் 1966 ம் ஆண்டு பொருளியல் நிபுணரும் "சிறியது அழகானது" என்ற நூலின் ஆசிரியருமாகிய டாக்டர் ஈ எவ் சூமாக்கர் அவர்களின் தலைமையிலான ஒரு சிறு நலன்விரும்பிகள் குழுவினரால் இடைநிலைத் தொழில்நுட்ப அபிவிருத்திக்குழு என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் பல்கிப்பெருகிப் பலம் பெற்று தற்போது பங்களாதேஷ், கென்யா, நேபாளம், பெரு, இலங்கை, சூடான், ஸிம்பாப்வே பொன்ற நாடுகளில் உலகளாவி-ய ரீதியில் தனது பணியை வியாபித்துள்ளது. உலகில் வறுமையை ஒழித்தல் மற்றும் சகலரது நலனுக்கான நீதியான தொழில்நுட்பப் பிரயோகம் போன்ற நோக்குடனான, தொழில்நுட்பத்துடன் ஆரம்பிக்காது மக்களுடன் ஆரம்பிக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரு அணுகுமுறையை ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் கொண்டுள்ளது. இந்தக் கருவிகள் மிக இலகுவானவை. ஆனால் நீண்டகால அணுகுமுறை மற்றும் விசேடமாக தமக்கு ஏற்றவாறு தொழில்நுட்பங்களை மாற்றி கட்டுப்படுத்திக்கொண்டுள்ள உள்ளூர் மக்களின் கைகளிலுள்ள நடைமுறை விடைகளைக் கொண்டுள்ளன. சரியான எண்ணக்கருத்துகள் சிறியனவாகவிருப்பினும் அவை வாழ்கையை மாற்றக்கூடியன என்ற நம்பிக்கையை ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் கொண்டுள்ளது தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல், மக்கள் சிறந்த வாழ்க்கையைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல் முதலிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது. அதனாலேயே ஆற்றல் மற்றும் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்யும் வறிய மக்களுடன் இணைந்து நாம் பணியாற்றி வருகின்றோம்.

ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனத்தின் அணுகுமுறை ஒரு தனித்துவமானது. நாம் நான்கு முக்கிய விடயங்களில் பணியாற்றி வருகின்றோம்.

- துன்பகரமாக அதிகரித்துவரும் இயற்கை அனர்த்தங்கள், இன முரணைபாடுகள் மற்றும் சுற்றாடல் அழிவுகளினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களின் நலிவுறுந்தாக்கத்தைக் குறைப்பதற்கு உதவுதல்.
- உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும், தயாரிப்பதற்குகும்", சந்தைப்படுத்துவதற்கும் உதவுவதன் மூலம் வறிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல்.
- பாதுகாப்பு, சுத்தமான நீர், உணவு, வீடு, மின்சாரம் முதலிய அடிப்படைத் தேவைகளை வறிய சமூகங்கள் இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்.
- புதிய தொழில்நுட்பச் சவால்களை அம்மக்கள் எதிர்கொள்வதற்கும் மற்றும் அவர்களது வாழ்க்கையை மாற்றக்கூடிய சிறந்த தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்வதற்கும் உதவுதல்.

ப்றக்டிகல் எக்சன் நிறுவனம் மேற்கொண்டுவரும் சகல பணிகளும் சிறந்த பலனைத் தருவதோடு மக்களின் வாழ்க்கையை மாற்றக்கூடியனவாகவே காணப்படுகிறது.

www.practicalaction.org www.janathakshan.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org